MCOP No. 70/2020

Dated : 23.11.2023

Time: 12.20 pm to 12.30 pm

P.W- 1 சாட்சி ராஜேந்திரன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:

1) என்னுடைய வயது, வருமானம், தொழில் குறித்து ஆவணம் எதுவும் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அணைத்தும் பொய் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தேன். மேற்படி வாகனத்தை ஓட்டிய முருகேசன் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் தான் நீதிமன்றத்தில் அதை முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. மேலும் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தான் உள்ளது.

2) விபத்து சமயத்தில் நாங்கள் தலைகவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை. மேற்படி நடுரோட்டில் என்னுடைய வாகன ஓட்டுநர் எவ்வித முன்அறிவிப்புமின்றி திடீரென திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் அது தவறு. மேற்படி விபத்திற்கு காரணம் நான் வந்த வானத்தின் ஓட்டுநர் என்றால் அது தவறு. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணமானவை அது குணமாகிவிட்டது என்றால் அது தவறு. எனக்கு விபத்தில் நிரந்தர ஊனம் இல்லை என்றால் அது தவறு.

3) மேற்படி என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நாங்கள் இம்மனுவில் முன்நிறுத்தியுள்ள காப்பீட்டு ஆவணமானது 2ம் எதிர்மனுதாரரால் வழங்கப்படவில்லை என்றும் அது 1ம் எதிர்மனுதாரரால் மோசடியாக தயாரிக்கப்பட்ட காப்பீடு என்றும் எனவே மேற்படி விபத்து இழப்பீட்டை 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே செலுத்த கடமைப்பட்டவர் என்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மேலும் 1ம் எதிர்மனுதாரரின் காப்பீடு காலமானது 20.06.2016 முதல் 25.06.2017 வரை

மட்டும் தான் என்றால் சரிதான். அதன் பிறகு 2ம் எதிர்மனுதாரருடன் எவ்வித காப்பீடும் 1ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை

மேற்படி நான் முன்நிறுத்தியுள்ள காப்பீட்டு நகலானது காவல் துறையினரால் வழங்கப்பட்டது. அது மசா.ஆ 8 ஆகும்.

குறுக்கு விசாரணை

மேற்படி ஆவணம் காவல் துறையினர் தான் கொடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal**
**Attur.**